உள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. உபரி நீர், மிகுதியாக அந்தப் பகுதிகளில் வருகின்றதா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

276—

தடுப்பணை கட்டுதல்

***6495—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாக்களுக்குண்டான விடை:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலைப் பெருக்க, நீராதாரத்தைப் பெருக்க, குட்டைகளையும், ஏரிகளையும் ஆழப்படுத்தி தடுப்பணைகளைக் கட்ட உத்தரவிட்ட அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள வேப்பணப்பள்ளி ஒன்றியத்திலே, பெரிய மணவாரணப்பள்ளி

2002 மே 3]

ஊராட்சிக்கு உட்பட்ட கங்கமடுகு அணைத் திட்டம், பல ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கர்நாடக மாநிலம், ஆந்திரா மாநிலத்திலிருந்து வருகின்ற நீர், கிருஷ்ணகிரி அணைக்குச் சென்று, அங்கிருந்து உபரி நீராக 10,000 மில்லியன் கனஅடி நீர், கடலில் சென்று கலக்கின்ற நிலையை மாற்றி, அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு, அந்த அணையின் மூலமாகக் குறைந்தது 2,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் நிலைமையை உண்டாக்க, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சிங்கிரிபள்ளி கிராமத்தின் அருகே நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே ஓர் ஏரி அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.345 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் சிங்கிரிபள்ளி, கங்கமடுகு, பெரிய மணவாரணப்பள்ளி, கொள்ளப்பள்ளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 645 ஏக்கர் நிலங்கள் பயன் அடையும் வாய்ப்பு உள்ளது. எனினும், தல அதிகாரிகளிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

277—

பெண்கள் கல்லூரி

***1031—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகரில், இஸ்லாமியப் பெண்கள் பயன்பெறும் வகையில், அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா?